# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශේෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1994/46 - 2016 නොවැම්බර් මස 23 වැනි බදාදා - 2016.11.23

1994/46 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 23 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறியீட்டு இலக்கம்.: டிக்/எல்ஏஎன்/02/30/41.

பொது மக்கள் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியாளர் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:

மாத்தறை மாவட்டத்தில், திக்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவில், வத்தேகம வடக்கு கிராம அலுவலர் பிரிவில், வத்தேகம கிராமத்தில் அமைந்துள்ள மாத்தறை சிரேஷ்ட நிலஅளவையாளரின் வரைபட இலக்கம் மு.பி.மாறை 2677 இல், குறிப்பிடப்பட்ட கீழ் வரும் காணித் துண்டுகள்.

**1. துண்டு இல. 01**

காணியின் பெயர்: கொல்லன்மாறுவ; விபரம்: வீட்டுத் தோட்டம், கலப்புப் பயிர்ச்செய்கையொன்று உள்ளது; உரிமை கோருவோர்: கதிர்காமம், நவ நகரத்தில், இலக்கம் 43 பீ இல் வதியும் கே.கே.ஸரித் அனந்தப்பிரிய; விஸ்தீரணம்: 0.0133 ஹெக்டயார்.

**2. துண்டு இல. 02**

காணியின் பெயர்: வெகெதரவத்த; விபரம்: வீட்டுத் தோட்டம், கலப்புப் பயிர்ச்செய்கையொன்று உள்ளது; உரிமை கோருவோர்: வத்தேகம, கொல்லன்மாறுவ, வெதகெதரவத்தயில் வதியும் எம். எச். ரீ. இந்திராணி; விஸ்தீரணம்: 0.0190 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப் பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு திக்வெல்ல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்ததற்கான நட்ட ஈடு பற்றிய அவர்களது கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படி இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பீ. எஸ். ரஞ்ஜித,
பிரதேச செயலாளர்,
திக்வெல்ல.

பிரதேச செயலகம்,
திக்வெல்ல.
2016, நவெம்பர் 21.

12 - 396

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.